**பதியத்தலாவ பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து பதியத்தலாவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியின் போது பௌதீக இருப்புக் காணப்படாத போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 114,240 இருப்புப் பெறுமதியொன்று காண்பிக்கப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் அந்த பெறுமதியால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் பேணிச் செல்லப்பட்ட பேரேட்டின் பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 148,235,567 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 590,505,934 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால் நிலையான சொத்துக்கள் ரூபா 442,270,367 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை கடை வாடகை ரூபா 176,733 ஆன போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 199,233 ஆக காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச்சொத்துக்கள் ரூபா 22,500 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான தொழிற்சாலைக் கடன் பட்டோர் ரூபா 415,556 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 724,873 ஆன காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 309,322 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே குறிப்பிடப்படுகின்ற சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) பிரதேச சபை விதிக்கோவை | |
| (i). விதி 59-66 | ஒவ்வொரு ஆண்டினதும் ஆரம்பத்தின் போதும் பிரதேசத்தில் மெய்மையாய்வை மேற்கொண்டு கைத்தொழில் வரி அறவிட வேண்டிய நிறுவனம் இனங்காணப்பட்டு அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii). விதி 180 | காசு, களஞ்சியம் மற்றும் வருமானம் சேகரித்தல் போன்ற செயற்பாடுகளில் பொறுப்பாக செயற்படுகின்ற உத்தியோகத்தர்களிடம் பிணை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 8.9.1.1 | உத்தியோகத்தரின் படிகள் நீங்கலான மாதாந்த சம்பளத்தின் மொத்த கழிப்பனவுகள் 40 சதவீத எல்லையினுள் கடன் தொகை பரிந்துரைக்கப்பட வேண்டிய போதிலும், 08 ஊழியர்களுக்காக ரூபா 1,214,060 தொகையான இடர் கடன் வழங்கும் போது அது கவனத்திற் கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை | ஓட்ட நிலமையிலுள்ள 05 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,701,241 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 783,834 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (i) | வீதவரியும் வரியும் | 103 | 134 | 134 | - | 161 | 65 | 65 | - |
| (ii) | வாடகை | 10,213 | 4,071 | 3,973 | 176 | 3,929 | 2,333 | 2,393 | 79 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 634 | 325 | 325 | - | 392 | 378 | 378 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,888 | 2,616 | 2,710 | 305 | 4,047 | 2,311 | 2,284 | 399 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 7,626,659 ஆனதுடன், ஆண்டினுள் ரூபா 7,144,056 தொகை அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய வருமானம் சேகரித்தலின் சமவீதமானது 93.67% அளவில் நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.3 வாடகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 176,733 தொகையான நிலுவை கடை வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டு முதல் கிடைக்க வேண்டிய இறைச்சிக் கடை வாடகையான ரூபா 24,115 தொகையை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானியின் பிரகாரம் ஒரு தொலைபேசி கோபுரத்திற்காக அங்கீகாரத்தை வழங்குவதற்கு ஆகக் குறைந்தது ரூபா 20,000 வீதம் அறவிட வேண்டியிருந்த போதிலும், சபை அதிகாரப் பிரதேசத்தில் 10 தொலைபேசி கோபுரங்களுக்காக ரூபா 200,000 தொகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 52,833 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 228,922 ஆகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் ரூபா 48,000 செலவிடப்பட்டு, 2017 செப்தம்பர் மாதத்தின் போது விரலடையாள இயந்திரமொன்று நிறுவனத்தில் பொருத்தப்பட்ட போதிலும், 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் அதன் மூலம் வருகை மற்றும் வெளிச் செல்லல் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 21 வாகனங்களில் 13 வாகனங்களுக்காக வருடாந்த வருமான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபைக்கு சொந்தமான கெப் வண்டியொன்று பழுதுபார்த்தல் பணிகளுக்காக 2014 யூலை 19 ஆந் திகதி முதல் அம்பதென்ன இயந்திரப் பொறியியல் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும், அதனை பழுதுபார்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2012 ஆம் ஆண்டு முதல் காணப்படுகின்ற இலங்கை மின்சார சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 93,480 தொகையினை தீர்ப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட செயற்திட்ட நிறைவேற்றங்களுக்காக சீமெந்து மற்றும் சுவர் சாயங்களை கொள்வனவு செய்த போது கூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 107,812 தொகையை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்திற்கு 2010 ஆம் ஆண்டு முதல் செலுத்துவதற்குள்ள ரூபா 268,232 தொகை 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணியின் 03 வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) சபையில் கடமையாற்றி இடமாற்றம் பெற்ற இரு உத்தியோகத்தர்களிடமிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் அறவிடப்பட வேண்டிய ரூபா 13,960 தொகையான ஊழியர் கடன்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர் ஒருவருக்காக 2017 பெப்ரவரி 13 ஆந் திகதி வழங்கப்பட்ட ரூபா 140,000 தொகையான இடர் கடன் மற்றும் அதற்குரிய வட்டி 2018 யூலை 10 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான ஓட்ட நிலையிலுள்ள 02 உழவு இயந்திரங்களினதும் மயிலோ மீட்டர்கள் செயலிழந்த நிலையில் காணப்படுவதுடன், அதனை பழுதுபார்க்காது எரிபொருள் வழங்கி ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்கு சொந்தமான வியாபாரக் கட்டங்களில் காணப்பட்ட 05 கடைகளினை குத்தகைக்கு வழங்கி வருமானம் ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.4.1 சொத்துக்கள் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாமை**

உள்ளூராட்சி திணைக்களத்தினால் வழங்கப்பட்டிருந்த பவுசர் மற்றும் ட்ரெயிலரொன்றினது பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளாமை**

சபைக்கு சொந்தமான 21 வாகனங்களில் 09 வாகனங்கள் பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட போதிலும், அந்த வாகனங்கள் பழுது பார்க்கப்பட்டு பயன்படுத்தப்படாது சபையின் வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

**3.4.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் பயன்படுத்தப்படும் 10 வாகனங்களின் உரித்தினை சபையின் பெயருக்கு கையேற்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பயன்படுத்தப்படும் மொத்தப் பரப்பளவானது 04 ஏக்கர்கள், 02 ரூட்கள் 23 பேர்ச் அளவான 05 காணிகளின் உரித்தினை சபையின் பெயருக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.4 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

02 ஏக்கர்கள், 01 ரூட், 26.7 பேர் பரப்பளவான சபையின் பழைய கட்டிடம் அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடம் எந்தப்பணிக்காகவும் பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

## 3.5 பெறுகைகள்

### 3.5.1 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட பாதீட்டுச் சுற்றறிக்கை இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 01 சதவீதம் முதல் 63 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் | கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | - கணக்கு புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் நாளதுவரையாக பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் முகாமைத்துவம் | - (i) பதிவேட்டிற்குட்படுத்தாமை.<br>(ii) பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை. |
| (இ) | இருப்பு | - (i) பதிவேட்டிற்குட்படுத்தாமை.<br>(ii) முறையற்ற இருப்புக் கட்டுப்பாடு |
| (ஈ) | கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு | - (i) பட்டோலைகள் தயாரிக்கப்படாமை<br>(ii) காலப்பகுப்பாய்வு தயாரிக்கப்டாமை |
| (உ) | ஊழியர் முகாமைத்துவம் | - வெற்றிடங்கள் நிரப்பப்படாமை. |
| (ஊ) | செயற்திட்டம் மற்றும் ஒப்பந்தங்கள் | - போதியளவான மேற்பார்வையொன்று இல்லாதிருந்தமை. |